**அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1942 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 621) பிரிவு 24(1) மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிட்டிருந்த முக்கிய விடயங்களின் தாக்கத்தின் காரணமாக நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடிய முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புகள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதனை செய்யும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்காய்வு நியமங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமத்துடன் தொடர்பும் அதனோடு இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவு அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை 2.4 (சீ) (ii) பங்களிப்புத் தொகை பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றதென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி ஆண்டின் போது கிடைத்திருந்த கட்டாய பங்களிப்புத் தொகை ரூபா 328,201,324 தொகை பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | விடயம் தொடர்பாக இணங்குகின்றேன். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செலவுகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகளை உரிய முறையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் மீளாய்வாண்டில் ஆரம்ப மற்றும் இறுதி அங்கத்துவர்கள் | தனிப்பட்ட கணக்குகள் பேணப்படுவதன் மூலம் இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாக இருந்ததுடன், அதற்காக உரிய நிறுவனத்திற்கு முறைமையினூடாக தகவல்கள் அனுப்பும் படி | பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பாக முறையான தரவு முறைமை ஒன்று பேணுவதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்காக அங்கத்துவப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அதன் காரணமாக 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டாயப் பங்களிப்புத் தொகை கணக்கின் மீதி ரூபா 28,972,771,536 தொகை, தன்னிச்சை பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 44,799,765 தொகை மற்றும் அரசாங்கப் பங்களிப்புத் தொகை கணக்கு மீதி ரூபா 44,820,450,342 தொகைக்கான மீதிகள் பங்களிப்பாளர்களின் உரிமையின் படி தனியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. | வலியுறுத்தப்பட்டது. அவ் அறிவித்தல்கள் மற்றும் ஞாபகமூட்டல்களின் படி தற்போது இந்த நிறுவனங்கள் 80 – 90 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையான முறைமை ஊடாக பங்களிப்புத் தொகைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் நிகழ்வுநிலை முறைமை ஊடாக பெறுவனவுகள் 8% மற்றும் 12% பங்களிப்புக் கணக்கின் படி வகைப்படுத்தப்பட்டு தனிப்பட்ட மீதிகள் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களின் மூலம் அல்லது பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியத்தின் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்கள் தொடர்பாக இனங்காணப்படாத மீதிகளை தீர்க்கப்படும் வரை சீராக்கல் கணக்கொன்றில் பதியப்பட்டிருந்தது. இதன்படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இனங்காணப்படாத சீராக்கல் கணக்கில் காணப்படும் பல வருட காலம் முதல் சேகரமாகி வரும் மீதி ரூபா 29,811,314 தொகையாக இருந்தது. விரிவான அட்டவணை ஒன்று சமர்ப்பிக்கப்படாமையால் அந்த மீதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதியத்தினால் பேணப்பட்டு வருகின்ற அட்டவணையில் பல வருடங்களுக்கு முன்னர் இருந்து ஆரம்ப மீதி ரூபா 29,807,957 தொகை காட்டப்பட்டு வருகின்றதுடன், அத் தொகை எமது சீராக்கல் கணக்கு மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. இந்த மீதி தீர்க்கப்பட்டுள்ளதா என நிறுவனங்களில் இருந்து தொடர்ச்சியாக விசாரணை மேற்கொண்டு வருவதுடன், எதிர்காலத்தில் முகாமைத்துவ குழு ஊடாக இந்தப் பிழையான வரவு வைத்தலை அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வருடாந்தம் சீராக்கல் கணக்கின் மீதி, வெவ்வேறாக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணக்கஞ் செய்து சரியான கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,627,899,989 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,520,628,550 தொகையாக காணப்பட்டது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 1,107,271,439 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முதலீடுகளில் இருந்து வட்டி வருமானம் ரூபா 897,993,615 இனால் அதிகரித்திருத்தல் முக்கிய காரணமாக இருக்கிறது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் அங்கத்தவர்களினால் நலன்கள் பெற்றுக்கொள்வதற்காக ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 5,188 இல் 987 விண்ணப்பங்களுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையும் கொடுப்பனவு மேற்கொண்டிருக்கவில்லை. | 2020 ஆண்டின் மார்ச் மாதத்தில் மற்றும் 2020 ஒக்தோபர் மாத இறுதியில் COVID 19 தொற்றுநோய் பரவிய காரணத்தினால் ஓய்வூதிய திணைக்களம் செயற்படாமல் இருந்தமையால் உத்தியோகத்தர்களை அழைப்பதற்கு முடியாமையின் காரணமாக வருட இறுதியில் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 987 ஆகும். | விண்ணப்பங்களுக்காக தாமதம் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |